**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.STC.No.220/2024**

**Deposition of Witness for Petitioner PW1 recalled**

| | | |
|---|---|---|
| **Name** | : | இராமச்சந்திரன் |
| **Father's Name** | : | **காளியப்பன்** |
| **Village** | : | **இந்திரா நகர்** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **ரியல் எஸ்டேட்** |
| **Age** | : | **65** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**22.05.2026** **Witness Signature :**

**புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**PW1 மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை 12.20 A. M**

1. எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது, ஏதாவது ஆவணங்கள் எழுதி வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. பணம் வாங்கியபின்னர் காசோலையை கொடுத்தார். எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்றால், பஸ்ஸ்டேண்டில் அவரது காரில் வைத்து கொடுத்தார். என்ன காரில் வந்தார் என்றால் டயோட்டா காரில் வந்தார். இந்த கார்தான் வழக்கு சம்மந்தமாக டீல் பண்ணின காரா என்றால் இல்லை. இந்த வழக்கு பணபரிவர்த்தனை செய்யும் பொழுது யார் யார் கூட இருந்தார்கள் என்றால்

யாரும் இல்லை. அவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது சித்தப்பா ஜெயராஜ் மூலம் எனக்கு பழக்கம். எதிரியின் சித்தப்பாவான முரளியை எனக்கு தெரியும். அவருக்கும் எனக்கும் எதுமாதிரியான பழக்கம் என்று சொன்னால் ஸ்ரீராமில் ரூ.5,00,000/– பணம் கட்டாமல் விட்டதால் அந்த வண்டியை எடுத்துத்தரக்கோரி என்னிடம் சொன்னதால் அந்த வகையில் தெரியும். முரளி என்னிடம் ரூ.5,00,000/– பணம் கொடுக்காமல் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரவீன் குமாரை தெரியும். அவரது குடும்பத்தினரைப்பற்றி எனக்கு தெரியாது. அவர் எங்கு குடியிருந்து வருகிறார் என்று தெரியுமா என்றால் ஓட்டுப்பட்டறையில் குடியிருந்து வருகிறார். பிரவீனுடைய அம்மா நர்சாக கோத்தகிரியில் பணிசெய்து வருகிறார்.

2 நான் எதிரிக்கு அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அதில் எதிரி குன்னூர் வண்ணாரப்பேட்டையில் குடியிருந்து வருவதாக கூறியுள்ளேன் என்றாலும், தற்பொழுது ஓட்டுப்பட்டறையில் குடியிருந்து வருவதாக மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் விலாசம் மாறியிருக்கலாம். எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை யார் நிரப்பினார்கள் என்று சொன்னால் எதிரி நிரப்பினார். எதிரி இந்த காசோலையை ஏற்கனவே நிரப்பி எடுத்து வரும்படி எதிரியிடம் நான் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. எதிரிக்கு நான் காசோலை கேட்பேன் என்று ஏற்கனவே தெரியுமா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது.

3. என்ன தொகை நான் கொடுக்கப்போறேன் என்ற விவரம் எதிரிக்கு முன்பே தெரியுமா என்றால் தெரியும். தொகை கேட்டதால் தெரியும். அந்த தொகையை கொடுப்பேன் என்று அவருக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று தேதி தெரியுமா என்றால் தெரியும். 09.01.2024 ம் தேதியன்று பணம் கொடுத்தேன். எதிரி கொடுத்த காசோலையின் எண் என்னவென்று தெரியுமா என்றால் தெரியவில்லை. எதிரி கொடுத்த காசோலையில் பின்னால் எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் காசோலை பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தும் என்னால் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், மேற்படி இரண்டு கையெழுத்துமே என்னுடையது என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் சித்தப்பா முரளியும் நானும் நண்பர்கள் என்றாலும், முரளிக்காக கொடுத்த காசோலையை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் பெயர் பிரேம் குமார் ஆகும். எதிரி என்னிடமிருந்து பணம் ஏதும் வாங்கவில்லை என்றாலும் வாகனம் விற்பனை சம்மந்தமாக என்னிடம் கொடுத்த காசோலை பொய்யான காரணத்தை சொல்லி எதிரிமீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரியிடம் நான் பணம் கொடுத்த போது, எத்தனை மாதங்களில் எத்தனை தவணையாக தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் ஒரே மாதத்தில் பணத்தை எடுத்துக்கொள்ளும்படி காசோலையை பூர்த்தி செய்து எடுத்து வந்து கொடுத்தார். 30 நாட்கள் கழித்து இந்த காசோலையை வங்கியில் தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியிடம் தாக்கல் செய்யும்

விவரத்தைப்பற்றி கூறினேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த காசோலை வங்கியிலிருந்து திருப்பி வந்தவுடன் அது குறித்து எதிரியிடம் தகவல் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be cor– rect.**

**Sd/– G. Amirdham, 22.05.2026**
**District Munsif,**